


Registered as a Newspaper | பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 89

வெள்ளிக்கிழமை
23 பெப்ரவரி 2024

மாசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

கொக்குத்தொடுவாயில்

# 1994 - 96 இல் இறந்தோரின் எச்சங்களே மீட்கப்பட்டன!

## நீதிமன்றத்தில் இடைக்கால அறிக்கை

முல்லைத்தீவு, பெப்ரவரி 23

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குரியவை என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

11



## ஆர்.ஆர். மறைவு!

கொடிகாமம், பெப். 23

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பிரதித் தலைவரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் (குத்துவிளக்குச் சின்னம்) பொதுச் செயலாளருமான ஆர்.ஆர். என அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதன் (இராகவன் வயது - 61) நேற்றுக் காலமானார்.

தொல்புரத்தைப் 11

கொக்குத்தொடுவாய் புதைகுழி

## மூன்றாம் கட்ட அகழ்வுகள் நிதியின்மையால் தாமதம்

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு இன்னமும் நிதி விடுவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இரண்டு கட்டங்களாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முதற்கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11

## இளைஞரொருவர் சடலமாக மீட்பு!

சாவகச்சேரி, பெப். 23

கைதடி - நுணாவில் பகுதியில் 29 வயதான இளைஞரொருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தவறான ' 11

## விஞ்ஞானபீட மாணவர்கள் காலவரையற்ற புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் காலவரையற்ற புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர். 11

## கனடாவுக்கு அனுப்புவதாக 7.5 கோடி ரூபா மோசடி!

யாழ்ப்பாணம், பெப். 23

கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, கடந்த மூன்று வருடங்களில் மட்டும் யாழ்ப்பாணத்தில் 7.5 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 11

உடுப்பிட்டியில் வாகனம் தீக்கிரை

## விபத்தில் உயிரிழந்த மாணவனுக்கு தொடர்பா?

### தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பியபோதே விபத்து

### கூடச் சென்றவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், பெப். 23

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் யாழ். போதனா மருத்துவமனையில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த யாழ். பல்கலைக் கழக மாணவனுடன் பயணித்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 11

யாழ். இந்தியத் துணைத்தூதரக



## புதிய கொன்சியூலராக சாய் முரளி நியமனம்!

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூல் ஜெனரலாக சாய் முரளி அடுத்தவாரம் முதல் பதவியேற்கவுள்ளார்.

கொன்சியூல் ஜெனரல் ராகேஷ் நட்ராஜின் பதவிக்காலம் எதிர்வரும் 25ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற 11

## மனைவிக்கு 'ஐஸ்' வைக்க காதலர் தினத்தில் களவு!

### 29 பவுணைக் கொள்ளையிட்டவர் சிக்கினார்

### உடந்தையாயிருந்த பெண்ணும் கைது

யாழ்ப்பாணம், பெப். 23

காதலர் தினத்தன்று தனது மனைவிக்குப் பரிசளிப்பதற்காக 29 பவுண் நகைகளைக் கொள்ளையிட்ட இளைஞரும் அவருக்கு உடந்தையாக இருந்த பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வல்வெட்டித்துறைப் பகுதியில் மூதாட்டியொருவர் வசிக்கும் வீட்டில் கடந்த 14ஆம் திகதியன்று 29 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன. திருட்டில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றிருந்தனர். இது தொடர்பில் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் நகையை அடகு வைப்பதற்காக பெண்ணொருவர் 11

## அழுகிய நிலையில் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம், உரும்பிராய்ப் பகுதியில் அழுகிய நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சின்னத்துரை ஜெகதீஸ்வரி (வயது-66) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். 11

முத்துத்தம்பி வித்தியாலயத்தில்

## சிறுவர் இல்ல மாணவன் மீது ஆசிரியரால் கொடூரத் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப். 23

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சிறுவர் இல்ல மாணவன் மீது ஆசிரியர் ஒருவரால் மிலேச்சத்தனமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

9ஆம் தரத்தில் கல்விபயிலும் மாணவன் மீதே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொரோனாத் தடுப்பூசிகள் அவதானிப்பது அவசியம்!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு*

**கொழும்பு, பெப்.23**

**கொரோனாத் தடுப்பூசிகளால் பல உடல் பாதிப்புகள் ஏற்படுகின்றமை சர்வதேச ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக இலங்கையின் சுகாதாரத் துறையினர் விழிப்புடன் இருக்கவேண்டும் என மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

சர்வதேச ஆராய்ச்சி முடிவில் வெளிப்படுத்தப்பட்ட பாரதூரத் தன்மை காரணமாக இலங்கை எச்சரிக்கை நிலைக்குச் செல்வது சிறந்த விடயம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டில் கொரோனாத் தடுப்பூசிகளால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் தொடர்பாக இலங்கை எச்சரிக்கை நிலையில் இருப்பதும் விழிப்புணர்வையும் அவதானிப்பையும் பேணுவது மிகவும் அவசியம்.

இந்த ஆய்வு இலங்கைச் சூழமைவுக்கு மாறான ஒரு சூழமைவில் மேற்கொள்ளப்பட்டதால் இலங்கையுடன் பொருத்திப் பார்க்க முடியாது. மரபணுக்கள் உட்படப் பல விடயங்கள் இந்த விடயத்தில் முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றன. ஆயினும் சுகாதார அமைச்சு நிலைமையை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். உள்நாட்டில் கொரோனாத் தடுப்பூசிகளின் பாதிப்புத் தொடர்பான ஆய்வை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)



## இந்தியாவிலிருந்து வந்ததே பௌத்தம்

*ஹரின் தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 23

வரலாற்றுப் பின்னணியை விளக்கி முதலீட்டாளர்களுக்கு அழைப்பே விடுத்தேன். எனது கருத்தைத் திரிபுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடாதீர்கள் என்று ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி எனச் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கடந்தவாரம் மும்பையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார். இந்தக் கருத்து தென்னிலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. இதுதொடர்பில் சபையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எனது கருத்தைத் திரிபுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடுகின்றனர்.

பௌத்த மதம் இந்தியாவில் இருந்துதான் வந்தது. விஜயன் இந்தியாவில் இருந்துதான் வந்தார். வர்த்தகம், கலாசாரம், பண்பாட்டு ரீதியாக வரலாற்றுக் காலம் தொட்டு எமது உறவுகள் இந்தியாவுடன் தொடர்கின்றன. ஆனால் இலங்கை இந்தியாவுக்கு உரித்துடைய ஒரு பகுதி என நான் கூறவில்லை-என்றார். (ச-இ)

## விமர்சித்தாலும் யுக்திய தொடரும்

*டிரான் திட்டவட்டம்*

கொழும்பு, பெப். 23

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்கும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் நிறுத்தத் தயாரில்லை எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

மேலும், கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் பெறுமதி 7.8 பில்லியன் ரூபா எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

'இந்த வேலைத்திட்டம் தொடர்பில் எம்மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. போதைப்பொருள் வலையமைப்பு மூலம் பணம் பெறுபவர்கள் அந்தக் குழுக்களுக்கு பணத்தைச் செலவிடுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது' என்று அமைச்சர் டிரான் தெரிவித்தார். (ஒ-44)

## எம்.பி.க்களை வளைக்க ரணிலின் புதிய திட்டம்

கொழும்பு, பெப். 23

ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 300 மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்கள் ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ளதாக கம்பஹா மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தாம் அடுத்த முறை தெரிவு செய்யப்படமாட்டோம் என்பது நன்கு தெரியும். அதனாலேயே மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கி அவர்களை வளைத்துப்போட ஜனாதிபதி முயல்கிறார் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-6)



## ஏலத்தில் பஸிலின் பங்களா

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்குச் சொந்தமானது என நம்பப்படும் மல்வான பங்களாவை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஏலத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த ஜூன் மாதம் முன்னாள் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்சவின் சட்டத்தரணிகள் பூகொடை நீதிமன்றத்தில் இந்தப் பங்களா முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமானது அல்ல எனத் தெரிவித்ததையடுத்து பூகொடை நீதிவான் பங்களாவை ஏலத்தில் விற்பனை செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். (ஒ-6)

## சர்ச்சைக் கருத்து எதிராக நடவடிக்கை

கொழும்பு, பெப்.23

இலங்கை மின்சாரசபையின் பேச்சாளருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் உறுதியளித்துள்ளார். மின்சாரசபைப் பேச்சாளருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படும். அதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்திருந்தார். (எ-இ)

## ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் நாடு நிச்சயம் பிளவுறுமாம்

*மேர்வின் சில்வா பதறுகிறார்*

கொழும்பு, பெப்.23

மக்கள் விடுதலை முன்னணி ஆட்சிக்கு வந்தால் நாடு பிளவுபடும் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார்.

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கிலேயே ஜே.வி.பி. ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றது.

நாட்டில் தற்போது பொருள்களின் விலை குறைவடைந்துள்ளது. பொருள்களுக்குத் தட்டுப்பாடும் இல்லை, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள்களுக்கும் தட்டுப்பாடு இல்லை எனவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் அது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல. - என்றார். (எ-இ)

## ஜனாதிபதி வேட்பாளர் ரணில்



கொழும்பு, பெப்.23

தற்போதைய நிலையில் ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைத் தவிரப் பொருத்தமானவர் எவரும் இல்லை என்று அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே நாம் அனைவரும் ஆதரவு வழங்குவுள்ளோம். அவர் தான் வேட்பாளராக நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மாணவர்கள் கற்பதற்கு குப்பி விளக்குப் போதும்!

*சர்ச்சைக் கருத்தால் சிக்கலில் மின்சாரசபைப் பேச்சாளர்*

கொழும்பு, பெப்.23

மாணவர்கள் குப்பி விளக்கில் கல்விகற்கப் பழகவேண்டும் என இலங்கை மின்சாரசபையின் பேச்சாளர் நொயல் பிரியந்த தெரிவித்த கருத்துப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள் அவசியம் ஏற்பட்டால் குப்பி விளக்கில் கல்வி பயில முயலவேண்டும், இந்த விடயத்தில் முன்னோர்களை அவர்கள் பின்பற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். நான் குப்பி விளக்கிலேயே படித்தேன் எனத் தெரிவித்த அவர், தொழில்நுட்ப வசதிகளை நம்பியிருப்பதற்குப் பதில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அவசியமான தேவைகளை மாத்திரம் வழங்கவேண்டும் என்று கூறியிருந்தார். இந்தக் கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், நொயல் பிரியந்த மின்சாரசபைப் பேச்சாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார். பேச்சாளரின் கருத்துக்கு மின்சாரசபை சார்பிலும் அமைச்சின் சார்பிலும் மன்னிப்புக் கோருகின்றேன் என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் 18 சதவீதம் குறையும்



*மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, பெப். 23**

**வீட்டு மற்றும் மதத்தலங்களின் மின்கட்டணம் 18 சதவீதத்தால் குறைக்கப்படும். திருத்தம் செய்யப்பட்ட மின்கட்டணத் திருத்த யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படும் என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்னுற்பத்தியின் செலவை முகாமைத்துவம் செய்யும் வகையில் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டதனாலேயே மின்விநியோகம் இன்று சீராக முன்னெடுக்கப்படுகிறது.

மின்சாரத்துறையின் முன்னேற்றத்தின் பயனை நாட்டு மக்களுக்கு முழுமையாக வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்தை முழுமையாக இரத்துச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீடு மற்றும் மதத்தலங்களின் மின்கட்டணம் 18 சதவீதத்தாலும், கைத்தொழிற்சாலைகள், ஹோட்டல்களுக்கான மின்கட்டணம் 12 சதவீதத்தாலும், அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கான மின்கட்டணம் 24 சதவீதத்தாலும் குறைக்கப்படும் - என்றார். (ச-இ)

## இழுத்தடிக்கப்படும் துஷ்பிரயோக வழக்குகள்

கொழும்பு, பெப். 23

பாலியல் துஷ்பிரயோக, பாலியல் வன்புணர்வு வழக்குகள் தொடர்பான விசாரணைகள் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குற்றம் சுமத்தியுள்ளது.

2022ஆம் ஆண்டு ஆயிரத்து 500பேர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். 500 பேர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

பாலியல் வன்புணர்வு தொடர்பில் 257 வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும், நீதிவான் நீதிமன்றங்களில் 423 வழக்குகளும் நிலுவையில் உள்ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஒ-6)

## சிறையில் அதிகரிக்கும் பெண் கைதிகள்

கொழும்பு, பெப். 23

பெண் கைதிகளின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் செல்வதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டு 215 ஆக இருந்த பெண் கைதிகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டு 390 ஆக அதிகரித்துள்ளது.

பெண் கைதிகளில் 57 சதவீதமானோர் மது மற்றும் போதைப்பொருள் குற்றச்சாட்டுகளின் கீழ் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

77 சத வீதமானோர் 22 - 50 வயத்துக்குட்பட்டவர்கள். 66 சதவீதமானோர் திருமணமானவர்கள். 62 சதவீதமானோர் முதல் தடவையாக சிறைவாசம் அனுபவிப்போர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-6)

## இவ்வருட இறுதியில் பணவீக்கம் சரியும்!

மத்திய வங்கி நம்பிக்கை

இலங்கையின் பணவீக்கம் இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் அரசாங்கத்தின் இலக்கான 5 வீதத்தை நோக்கித் திரும்பும் என்று இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி அதிகாரியொருவர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு இந்த தகவலைத் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணயநிதியத்தின் திட்ட உதவியுடன், அண்மைய மாதங்களில் பொருளாதாரம் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது. அது பணவீக்கத்தை 5வீதத்துக்கும் குறைவாக கொண்டு வரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பணிப்பெண்களுக்கு புதிய வேலைவாய்ப்பு

பெண்களை வீட்டுப் பணியாளர்களாக வெளிநாட்டுக்கு அனுப்புவதை நிறுத்தி அதிக சம்பளம் பெறக்கூடிய திறமையான வேலைவாய்ப்புகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உயர் நிர்வாகத்துடன் இடம்பெற்ற சந்திப்பில் அமைச்சர் இந்த அறிவித்தலை விடுத்தார். வெளிநாடுகளுக்கு இலங்கைப் பெண்களை வீட்டுப் பணியாளர்களாக அனுப்புவதை முற்றாக நிறுத்தும் பிரேரணையைத் தயாரிக்குமாறும் அவர் ஆலோசனை வழங்கினார். (ச-இ)

## பிரமிட் திட்டத்தில் ஏமாந்த 22,000பேர்

குருநாகலைச் சேர்ந்த ஒரு தம்பதி பிரமிட் கட்டமைப்பு மூலம் 22 ஆயிரம் பேரிடம் 8 பில்லியன் ரூபா மோசடி செய்ததை குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் மத்திய வங்கியும் இணைந்து கண்டு பிடித்துள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள நிறுவனமொன்றில் முதலீடு செய்துள்ளதாகவும் அதிலிருந்து வரும் இலாபப்பணத்தை தனது முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட நபர் கூறியுள்ளார். குருநாகலில் வர்த்தகக்கல்லூரியை ஆரம்பித்து தன்னை அதன் தலைவராகப் பதிவு செய்துள்ளார். இவரது ஆவணங்களைப் பரிசோதித்த போது அவை போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தில் சிலர் பத்து முதல் பதினைந்து இலட்சம் ரூபா வரை முதலீடு செய்துள்ளனர். முதலீடு செய்தவர்களுக்கு எதுவித பயனும் கிடைக்கவில்லை. (ஒ-6)

## புதினம் தெரியுமோ?

**தமிழரசுக் கட்சி இவ்வளவு தள்ளாடுறதுக்கு என்ன காரணம் எண்டு நினைக்கிறியள்? வேறையென்ன, பதவியாசை பிடிச்ச பெரியவை இன்னமும் கதிரையைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கிறதுதான். கட்சியில இவ்வளவுநாளும் முக்கியமான பொறுப்புகளில இருந்தவையெல்லாருமே 80 வயசைத் தாண்டின ஆக்கள்தான். பொருளாளர், நிர்வாகச் செயலாளர், சிரேஷ்ட துணைத் தலைவர் எண்டு கட்சியின்ர நடவடிக்கையளைத் தீர்மானிக்கிற பொறுப்பில இருந்தவையெல்லாம் எப்பவோ பென்சனில வீட்டை போயிருக்கவேண்டிய ஆக்கள். ஆனால் புது நிர்வாகத்திலையும் தங்களுக்கு இப்ப இருக்கிறதைவிடவும், அதிகாரமுள்ள பதவிவேணும் எண்டு கேக்கினம். கட்சிக்குள்ள இவ்வளவு வெட்டுக்குத்து நடக்கிறதுக்கு காரணமே இவையின்ர பதவியாசையும்தான்.**

**இப்ப வழக்குப் போடப்பட்டிருக்கிறதுக்கு, முக்கியமான காரணங்கள் பொதுச்சபை உறுப்பினர்களின்ர எண்ணிக்கை கூடிப்போச்சு, கடைசி நேரத்தில் பொதுச்சபையில இல்லாதவையை வாக்களிக்கவிட்டது எண்டதுகள்தான். அதுக்கு முக்கியமான காரணம் நிர்வாகச் செயலாளர் தான். உண்மையா அது ஒரு டம்மிப் பதவி. ஆனால் பொதுச் செயலாளர்மார் தங்கட வேலைச் சுகத்துக்காக, நிர்வாகச் செயலாளரிட்டையே பொதுச்சபை உறுப்பினர் பட்டியலைச் செய்யிறவேலையைக் குடுக்கிறவை. வீட்டுக்கட்சியின்ர புதுத்தலைவரைத் தெரிவு செய்யிற எலக்சன் நடக்கிற நாள் மட்டும் அந்தப் பட்டியலை நிர்வாகச் செயலாளர் செய்து முடிக்கேலை. கடைசி நேரத்தில, ஏதோ எக்ஸாமுக்கு பார்த்து எழுதக் கொண்டந்த நோட்ஸ் மாதிரி, ஒரு கொப்பிப்பேப்பரில கொஞ்சப் பேரை பொதுச்சபை உறுப்பினர் எண்டு நிர்வாகச் செயலாளர் குடுத்தவர். அவையைத்தான் வாக்களிக்கவிடக்கூடாது எண்டு பிரச்சினை கிளம்பி, பிறகு ஒருமாதிரி எல்லாரும் அரை மனதோட வாக்களிக்கவிட்டவை. இந்தப் பட்டியலை முதலே ஒழுங்கா நிர்வாகச் செயலாளர் முடிச்சுப்போட்டு, எல்லாருக்கும் குடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காதே. ஒருவேளை பிரச்சினையைக் கிளப்போணும் எண்டதுக்காகவே அவர் இப்பிடிச் செய்தாரோ தெரியேலை. ஏனெண்டால் தலைவர் தெரிவுக்கு போட்டிபோட்ட சுமந்திரன்ர வேட்புமனுவைப் பிரேரிச்சு கையெழுத்து வைச்சதில நிர்வாகச்செயலாளரும் ஒராள்.**

**அதே சுமந்திரனின்ர வேட்புமனுவில கையெழுத்து வைச்ச இன்னொருத்தர் இப்பத்தை வடமாகாண அவைத்தலைவர் சிவஞானத்தார். அவருக்கும் தலைவர் பதவியில கண். எண்டாலும் போட்டிபோட்டால் நாலைஞ்சு வாக்குக்கூடக் கிடைக்காது எண்டதால, சுமந்திரனை சப்போர்ட் பண்ண வெளிக்கிட்டவர். கட்சியின்ர சிரேஷ்ட துணைத்தலைவர். ஆனால் பெரும்பம்பல் என்னெண்டால், அவருக்கு இன்னமும் கட்சி உறுப்புரிமை இலக்கம் இல்லையாம். கட்சியின்ர உறுப்புரிமை இலக்கம்கூட இல்லாதவர் தலைவர் தெரிவுக்கு நிக்கிற ஒராளின்ர வேட்புமனுவை பிரேரிச்சா அது சட்டப்பிழை இல்லையோ? இப்ப நடக்கிற குழப்பங்களுக்கு இவரும் ஒருபக்கம் தூண்டிவிட்டவர். ஆனால் ஒண்டுமே தெரியாத ஆள் மாதிரி 'எல்லாரும் சமாதானமாப் போங்கோ' எண்டு நல்லபிள்ளைக்கும் நடிக்கிறார்.**

**இப்பிடி வயசானபிறகும் குழப்பங்காய்ச்சியளா இருக்கிறவை, கட்சியைவிட்டு ஒதுங்கினாலே எல்லாப் பிரச்சினையும் தன்ர பாட்டில தீரும் பாருங்கோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய எழுச்சி நாள் - 2024

"தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்"

காலம்: 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10.00 மணி
இடம் : நட்சத்திர மஹால் மண்டபம், (யாழ். கொடிகாமம்)

கலை நிகழ்வுகள், உரைகள் இடம்பெறும்.

அனைவரும் வருக! ஆதரவு தருக!


உலக தாய்மொழி தின ஏற்பாட்டுக் குழு


## பண்டமாற்றின் மூலம் ஈரானின் கடனடைப்பு

ஈரானின் 20 மில்லியன் டொலர் எண்ணெய் கடனை தேயிலை ஏற்றுமதி மூலமாக இலங்கை முதற்கட்டமாகச் செலுத்தியுள்ளது. இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் வெளிவிவகார அமைச்சர் இந்த நடவடிக்கை குறித்து திருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஈரானுக்கான 251 மில்லியன் டொலர் எண்ணெய்க் கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. இதுவரை 20 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## ஆப்கனுக்கு ஆறுதல் வெற்றி தொடர் இலங்கையின் வசம்



**விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்த ஆப்கன் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் ஆப்கன் அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இலங்கை சுற்றுப்பயணத்தை ஆறுதல் வெற்றியுடன் ஆப்கன் அணி நிறைவு செய்தது. இலங்கை அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரை 2:1 என்ற ரீதியில் கைப்பற்றியது.**

நேற்றுமுன்தினம் தம்புள்ள ரங்கிரி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் ஆப்கன் அணியின் தலைவர் இப்ராஹிம் சத்ரான் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

ஆப்கன் அணி ஹஸ்ரத்துல்லா சஷாய் மற்றும் ரஹ்மானுல்லா குர்பாஸ் ஆகியோரது ஆட்டத்தின் மூலம் சிறந்த ஆரம்பத்தைப் பெற்றது. 20 ஓவர்கள் நிறைவில் ஆப்கான் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்கள் எடுத்தது.

ஆப்கன் அணியின் சார்பில் அதிகபட்சமாக ரஹ்மானுல்லா குர்பாஸ் 43 பந்துகளில் ஒரு சிக்ஸர் 7 பௌண்டரிகளோடு 70 ஓட்டங்கள் பெற்றார். அத்துடன் இது குர்பாஸின் 7ஆவது ரி-20 அரைச்சதமாகவும் மாறியது. இதேவேளை ஹஸ்ரத்துல்லா சஷாய் 22 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 6 பௌண்டரிகளோடு 45 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் மதீஸ பத்திரன மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீதம் சாய்க்க, வனிந்து ஹஸரங்க ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

2:10 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இறுதி வரை போராடியபோதும், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. வெற்றியை 3 ஓட்டங்களால் தவறவிட்டது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காது கமிந்து மெண்டிஸ் 39 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்கள் எடுத்தார். அதே நேரம் போட்டியின் நடுவே உபாதை காரணமாக வெளியேறிய பதும் நிஸ்ஸங்க 30 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 8 பௌண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்கள் பெற்றிருந்தார். ஆப்கன் அணியின் பந்துவீச்சில் மொஹமட் நபி 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை சாய்த்திருந்தார். போட்டியின் ஆட்டநாயகனாக ஆப்கன் வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் தெரிவானார். (எ)






## மிதந்து வந்த கூம்பு மிதவை



வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பகுதியில் கூம்பு வடிவ மிதவை ஒன்று நேற்று காலை கரையொதுங்கியுள்ளது.

அந்தப் பகுதி மீனவர்கள் குறித்த மிதவையைப் படகு மூலம் கட்டி இழுத்து கரைக்குக் கொண்டுவந்துள்ளனர். ஆழ்கடல் பகுதியில் அடையாளத்துக்காக குறித்த மிதவை பயன்படுத்தப்படுவதென மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த தகவல் கிடைப்பது மகிழ்ச்சி தரும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்று.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். விற்பனையில் இலாபம் உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** மனதில் இனம்தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற் கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாகும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## ஈழத்தமிழர் நலன்களை முன்னிறுத்தவேண்டும்!

### இந்தியத் தூதுவரிடம் நேரில் வலியுறுத்தினார் சிறீதரன் எம்.பி

கொழும்பு, பெப். 23

ஈழத் தமிழர்களின் நலன்களை முன்னிறுத்தியவகையில் இந்தியா செயற்படவேண்டும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட சிறீதரனை சந்தோஷ் ஜா நேற்று கொழும்பில் வைத்து நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக சிறீதரனுக்கு தனது வாழ்த்தை சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இதன்போதே ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் இந்தியாவின் முறையான வகிபங்கை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதன் அவசியம் குறித்து சிறீதரன் சுட்டிக்காட்டினார். (ம-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடலில் போடப்பட்ட கல்லாகும் தீர்வு


13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள, மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரத்தை நீக்கக்கோரும் திருத்தச் சட்டவரைவு ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. பௌத்த மேலாதிக்கச் சிந்தனையைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்திவரும் பிவிதுறு ஹெல உறுமயக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவே இந்தத் திருத்தச்சட்டவரைவை சமர்ப்பித்திருக்கின்றார். உதய கம்மன்பிலவின் திருத்தச் சட்டவரைவு நடைமுறைச் சாத்தியமா என்பதற்கு அப்பால், பௌத்த மேலாதிக்கச் சிந்தனையாளர்கள், நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறுநகர்வைக்கூட அனுமதிக்க மாட்டார்கள் என்பதையே இந்த முயற்சி வெளிப்படுத்துகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. சமஷ்டி முறையிலான தீர்வொன்றையே தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அந்தத் தீர்வை நோக்கி நகர்வதற்கான முதற்படியாகவே தமிழ் மக்கள் 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைப் பார்க்கின்றனர். அவ்வாறு இருக்கையில், 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட நடைமுறைப்படுத்துவதை விரும்பாத பௌத்த மேலாதிக்கச் சிந்தனையாளர்கள் அரசியல் இலாபங்களுக்காகவும் - வாக்கு வங்கிக்காகவும் நாட்டில் இனப்பிரச்சினை நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பதையே விரும்புகின்றனர்.

இறுதிப்போரின் பின்னர் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைத் தீர்வு விடயங்களில் காணப்பட்ட கனதி இப்போது தேய்ந்திருக்கின்றது. நாடுகளின் பிராந்திய நலன்களுக்குள் சிக்கி, இலங்கைத்தமிழர் விவகாரம் பின்தள்ளப்பட்டிருக்கின்றது. அயல்நாடான இந்தியாவும், இலங்கை விவகாரங்களில் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேசநாடுகளும் தமிழர்களுக்கான இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அடக்கியே வாசிக்கின்றன. இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களை வழங்குவதற்குக்கூட பிராந்திய வல்லரசான இந்தியா தயங்குகின்றது. இலங்கைக்கான இந்தியத் தூதுவர், தமிழர் தரப்பிடம் அதைப் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டிருக்கின்றார். ஆக மொத்தத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயம் இப்போது கடலில் போடப்பட்ட கல்போன்று அமிழ்ந்திருக்கின்றது.

தெற்கின் மனப்போக்கையும், சர்வதேசத்தின் மனவோட்டத்தையும் கணித்து நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய தமிழ் அரசியல் தலைவர்கள், அதிலிருந்து விலகியே இருக்கின்றனர். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அவர்களின் முயற்சிகள், நகர்வுகள் ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன என்றே கூறலாம். கட்சி அரசியலிலும், போட்டிகளிலும் கவனத்தைச் செலுத்தும் தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர் இனப்பிரச்சினையில் சர்வதேச நாடுகளின், பிராந்திய வல்லரசின் கவனத்தைத் தொடர்ச்சியாகத் தக்க வைப்பதில் தோல்வியடைந்துள்ளனர். தமிழர் தரப்பில் உள்ள இந்தப் பலவீனமான நிலைமை, இனப்பிரச்சினைத்தீர்வு என்ற போலி விம்பத்தைக் காட்டிக் காலம் காலமாக ஏமாற்றிவரும் தெற்கை நிச்சயம் மகிழ்ச்சிப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

மாற்றங்களை இனங்கண்டு தமிழ் மக்களின் பிரச்சினையில், தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான முயற்சிகளில் சர்வதேசத்தின் - பிராந்திய நாடுகளின் கவனத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டியது தமிழ் மக்களினதும், தமிழ் அரசியல் பிரதிநிதிகளினதும் கடமை. இப்போதுள்ள நிலைமை தொடருமானால், இன்னும் சில ஆண்டுகளில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற பேச்சு அடிபட்டுச் சென்றுவிடும் என்பதே யதார்த்தம். அதை உணர்ந்து தமிழர் தரப்பு இனியாவது சுதாகரித்துக் கொள்ளவேண்டும்.




# மீனவர் பிரச்சினையை தீர்த்துவைக்கத் தயார்



## பிரான்ஸ் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 23**

**இலங்கை மற்றும் இந்திய மீனவர்களிடையேயான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரான்ஸ் உதவி செய்யத் தயாராக உள்ளது - இவ்வாறு இலங்கைக்குக் கடந்த வாரம் பயணம் மேற்கொண்ட இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கான பிரான்ஸ் தூதுவர் மரே அபென்ஸோ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரான்ஸுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே மீன்பிடி தொடர்பாக பிணக்கு ஏற்பட்டபோது இலங்கையின் தலைமையில் (இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளின் கூட்டமைப்புக்கு இலங்கையே தலைமை தாங்கியது) பிணக்கு தீர்த்து வைக்கப்பட்டது. அதேபோல் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்த்து வைப்பதற்கு பிரான்ஸ் தயாராகவுள்ளது. இருநாட்டு மீன்பிடித் துறைமுக அதிகாரிகளும், மீன்பிடியில் ஈடுபட்டுள்ள படகுகள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனவா? என்பதை உறுதிப்படுத்தவேண்டுமென்றயோசனையை முன்வைக்கின்றேன்-என்றார். (ஒ-6)

# 453 பேக்கரிகள் பாணில் மோசடி

கொழும்பு, பெப். 23

வர்த்தமானி விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட நிறையில் பாண் விற்பனை செய்யாத 453 பேக்கரிகள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் கடந்த 5 ஆம் திகதி சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரைமேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 453 பேக்கரிகள் மற்றும் கடைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. என்றும் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# முகநூலில் அவதூறு: சபாநாயகரிடம் முறைப்பாடு

கொழும்பு, பெப். 23

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரோகித அபயவர்த்தன தன்னை ஒருவர் முகநூலில் அவதூறு செய்துள்ளார் எனவும் இதனால் தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் பதிவிட்டவரை, நாடாளுமன்றத்துக்கு அழைத்து நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழு ஊடாக அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் சபாநாயகரிடம் முறையிட்டுள்ளார். (ஒ-6)



# 6 மாவட்டங்களில் கடும் வெப்பம்

நாட்டின் பல மாவட்டங்களில் வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில் 6 மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடமேற்கு மாகாணம், கம்பஹா, கொழும்பு, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களில் அதிக வெப்பநிலை பதிவாகும். இந்த மாவட்டங்களில் இயல்பை விட அதிகமாக வெப்பநிலை காணப்படும் எனவும் வெளியிடங்களில் தேவையற்ற விதமாக நடமாடுவதைத் தவிர்க்குமாறும், அதிக நீரைப் பருகுமாறும், வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# புற்றுநோயை உருவாக்கும் கிறீம்கள் பறிமுதல்!

இறக்குமதி செய்யப்பட்ட புற்றுநோயை உண்டாக்கும் கிறீம்கள் அடங்கிய அழகுசாதனப் பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பாணந்துறை ஊழல் எதிர்ப்புச் செயலணியால் 4 கடைகள் சுற்றிவளைக்கப்பட்டபோதே ஒரு மில்லியன் ரூபா பெறுமதிக்கு அதிகமான கிறீம்களுடன் வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## நாளை

24.02.2024

**சனிக்கிழமை**

**மாசி–12**

சுபநேரம் : 03.30 - 05.00

ராகுகாலம் : 09.30 - 11.00

## நாளொரு நல்வார்த்தை

**வெற்றி வந்தால் பணிவு அவசியம்...!**
**தோல்வி வந்தால் பொறுமை அவசியம்...!**
**எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்...!**
**எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்...!**

**– நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டு விழா

நல்லூர், பெப்.23

நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் சைவவித்தியா விருத்திச் சங்க நூற்றாண்டு விழா இரண்டு அமர்வுகளாக சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

விழாவின் முதலாம் அமர்வு இன்று காலை 9 மணி முதல் பி.ப.12.45 மணி வரையும், இரண்டாம் அமர்வு பி.ப. 2.30 மணி முதல் மாலை 5 மணி வரையும் நடைபெறும்.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி ஜெ.பொ.சுகந்தராஜ், திருநெல்வேலி ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் வேலாயுதம் வசீகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-66)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.23

வரணி மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வாசல் வளைவு திறப்பு விழா, வருடாந்த வருணி சஞ்சிகை வெளியீடு மற்றும் பரிசில் நிகழ்வு என்பன பாடசாலையின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, பழைய மாணவரும் கிழக்கு மாகாண திறைசேரி பிரதம கணக்காளருமான த.சிவசெந்திநாதன், பழைய மாணவர்களான க.சிறிமோகனரஞ்சன் மற்றும் இ.சிறீரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)

## விவசாயக் குழுக்கூட்டம்

மன்னார், பெப். 23

மன்னார் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமானது மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் மதியம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சட்டவிரோதமாக நீரை எடுக்கும் வாய்க்கால்களை மூடுவது தொடர்பில் ஆராயப்பட்டது. வங்கிகளின் விவசாயம் தொடர்பான செயற்பாடுகள், கால்நடை பராமரிப்புகள் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன. (ஓ-213)


## மலையகம் தொடர்பான கலை, இலக்கிய நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.23

இலங்கைக்கு மலையகத் தமிழர்கள் வந்தமையின் 200 ஆண்டு நிறைவையொட்டி இலக்கியம், திரைப்படம், நடன ஆற்றுகை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு நிகழ்வு, ஜோன் கீல்ஸ் ஃபவுண்டேஷன்ஸ் அனுசரணையில் கிரேஷியன் ட்ரஸ்ட் அமைப்பினரால் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

நிகழ்வில் மலையகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களான எஸ்தர், சந்திரலேகா கிங்ஸ்லி, சிவனு மனோகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் விசேட கலைமாணிக் கற்கையில் ஈடுபடும் மாணவி இராமச்சந்திரன் கிர்த்திகா, பரதநாட்டியக் கலைஞரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் போதனாசிரியருமான இராசையா தனராஜ், கலைஞர்களான ஆனந்தகிருஷ்ணன் ஸ்ரீகாந்த், முரளிதரன் சுலக் ஷன், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பெ. சரவணகுமார், கல்வி வெளியீட்டுத் திணைக்கள மேலதிக ஆணையாளர் நாயகம் சு. முரளிதரன், சப்ரகமுவ பல்கலைக்கழக மொழிகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் லஃரீனா அப்துல் ஹக், பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் சிவமோகன் சுமதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் எழுதும் எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ப)

# சுதந்திரபுரம் வீதியை சீரமைக்கக் கோரிக்கை



**முல்லைத்தீவு, பெப்.23**

**முல்லைத்தீவு, சுதந்திரபுரம் வீதியைப் புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுதந்திரபுரம் கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

900 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் நடைபெற்றபோது கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்டது. குறித்த வீதி முறையாக அமைக்கப்படாததால் தற்போது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் அந்த வழியாகப் பயணிப்பது மிகவும் சிரமமாக உள்ளது என இந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், புதுக்குடியிருப்புப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த வீதியைப் புனரமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-4)

## தளர்வடைகிறது மரக்கறி விலை

யாழ்ப்பாணம், பெப். 23

அடுத்த மாதத்தில் மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மரக்கறி வகைகள் சந்தைகளுக்கு அதிகளவில் வந்து சேர்வதால் அவற்றின் விலை குறைவடைந்து வருகின்றது.

கத்தரிக்காய், பாகற்காய், பயிற்றங்காய், கரட் போன்றவற்றின் விலை திடீரெனச் சரிந்துள்ளது.

நேற்றைய நிலைவரத்தின்படி, கத்தரிக்காய் கிலோ 250 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 180 ரூபாவாகவும், பாகற்காய் கிலோ 300 ரூபாவாகவும், கரட் கிலோ 500 ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 500 ரூபாவாகவும் தக்காளி கிலோ 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

## 'யாழ்கோ'வில் தேர்தல்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் (யாழ்.கோ) கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சங்கத்தின் மூன்று கிளை நிலையங்களான யாழ்ப்பாணம், தென்மராட்சி, காரைநகர் போன்றவற்றுக்கு இந்தக் கிளைத் தேர்தல் இடம்பெறும்.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 31 கிளைகளுக்கும் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

## பொதுச்சபையைக் கூட்டக்கோரிக்கை

சாவகச்சேரி, பெப். 23

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுச்சபையைக் கூட்டி புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யவேண்டுமென்று வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மன்றநடவடிக்கைகள் திடீரென தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் செயற்படக்கூடிய நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கு பொதுச் சபையைக் கூட்ட வேண்டும் என்று வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக தற்போதைய தலைவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, கடந்த வருடம் பதவியிலிருந்து விலகியுள்ளேன். தற்போதைய மன்றச் செயற்பாடுகளை மன்ற உப தலைவர் கவனித்து வருகிறார் எனத் தெரிவித்தார். உப தலைவரிடம் கேட்டபோது, செயலாளர் எமக்கு ஒத்துழைப்பு வழங்க மறுப்பதால் மன்றத்தின் சில செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ஓ-9)

## கோப்பாய்ப் பகுதிகளில் ரோந்துப்பணி தீவிரம்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்.நகரை அண்டிய பிரதேசங்களில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸாரால் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.கோப்பாய்ப் பகுதிகளில் சட்டவிரோத மதுபான விற்பனை, திருட்டுகள் மற்றும் இரவு வேளைகளில் பொதுஇடங்களில் ஒன்றுகூடுவோர் போதைப் பாவனைகளில் ஈடுபடல் உள்ளிட்ட குற்றச்செயல்கள் தலைதூக்கியுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து ரோந்துப் பணிகளை முன்னெடுத்துள்ளனர். (ச-17)

## மாற்றுப்பயிர்களிலும் வெள்ளை ஈ தாக்கம்

கோப்பாய் பிரதேசத்தில் தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்து வருகின்றது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெள்ளை ஈக்கள் விவசாயப் பயிர்களிலும் பரவுவதனால் வாழை, பப்பாசி போன்ற செய்கைகளும் பாதிப்புக்குள்ளாகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து வெள்ளை ஈக்களின் தாக்கத்தை விரைந்து கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-17)


## நடேசர் அபிஷேகமும் பௌர்ணமி உற்சவமும்

யாழ்ப்பாணம், பெப். 23

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடேசர் அபிஷேகமும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாசிமக நவகுண்ட அபிஷேகமும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு கண்ணகியம்மனுக்கு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 06 . 1957

மறைவு 22 . 02 . 2024

## திரு. பயஸ் வின்சன்ட் யோசேப் (துரைநாயகம்)
(தர்சன் வெதுப்பக உரிமையாளர்)

கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பயஸ் வின்சன்ட் யோசேப் நேற்று 22.02.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் பயஸ் - கத்தரின் கனகமணி தம்பதியரின் அன்பு மகனும், கணேஸ் பீற்றர் - மேரி மக்டலின் (ராணி) தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜொய்சி அவர்களின் அன்புக் கணவரும், செல்ரன் சுரேன் (பிரான்ஸ்), லூட்சன் (சுவிஸ்), கமில்ரன் (கமல்), தர்சிகா தசானி (பிரான்ஸ்), வானுஜன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், யூடினா (பிரான்ஸ்), சுஜிதா (சுவிஸ்), நிரோஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வேதநாயகம், மரியநாயகம், ஜெயராஜா (பிரான்ஸ்), ஜெயராணி, செல்வநாயகம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற விமலராணி மற்றும் சந்திரா, விமல் (France), அன்ரன் செல்வரட்ணம், பவானி (German), அன்ரன் ஜோர்ச், அன்ரன் றொபேட் (றகிம்-London), காலஞ்சென்ற அன்ரன் யூட் றொபின் (றொபின்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லியா, கிறிஸ்தோ, லேயோ, டறில்கெவின், கிருத்திக், டனிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 23.02.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 06
புது வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 202 1800 (கமல்)
337 586 43844 (சுரேன்)
337 611 43077 (வானுஜன்)

(CS/54092) J-1


# உயிரினங்களை எடுத்துவரத் தடை

இந்தியாவில் இருந்து உயிரினங்கள் மற்றும் அவற்றின் உறுப்பு களை கச்சதீவுக்கு எடுத்த வரத் தடை விதிக்கப்பட் டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபால சுந்தரன் தெரிவித்தார்.

இலங்கை விவசாயத்திணைக்களத்தின் தனிமைப்படுத்தல் பிரிவு இந்த அறி விப்பை வெளியிட்டுள்ளது. விலங்கு கள், உயிரினங்கள், இறகுகள், உயிரி னங்களின் உறுப்புகளை எடுத்துவரத் தடை விதிக்கப்பட் டுள்ளது. (எ-125)


## தேவை

கடைக்கணக்கு எழுதுநர்
(Excel and computer அறிவுடன்),
லேத் வெல்டிங், ஆணி மெசின் வேலை தெரிந்தவர்களும், கட்டட இடிபாட்டு கற்களும் தேவை.

Whats app :- 077 252 3155
Viber :- 075 076 6979

(CS/54090) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்

077 334 1281

## DISH ANTENNA TECHNICIANS தேவை

கொழும்பில் இயங்கி வரும் SATTELITE மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக் கூடிய மற்றும் ELECTRONICS TECHNICIANS தேவை. தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய இருவர் தேவை. உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் கிடைக்கும். உடன் தொடர்புகொள்ளவும்

தொடர்பு: 077 771 0785

(cs.54088) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் செல்வி சர்மினி ஞானசம்பந்தர் அவர்களின் பாசமிகு சகோதரன்

### திரு. ஞானசம்பந்தர் மில்ரன்
(ஆசிரியர் - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

அவர்கள் கடந்த 20.02.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரி சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.


# பவளவிழாவுக்காக நாளை வீதித்தடை

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம், கொட்டடி சனசமூக நிலைய பவளவிழா நாளை சனிக்கிழமை சனச மூக முன்றிலில் நடைபெறவுள்ளது.

அதனையொட்டி அன்றையதினம் பிற் பகல் 3 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணிவரை சீனிவாசகம் வீதியில் வீதித் தடை போடப்படவுள்ளது.

வீதியை பாவனைக்குட்படுத்தும் கனகர வாகனங்கள், பாரவூர்திகள் மற்றும் இதர வாகனங்கள் குறித்த காலப்பகுதியில் மாற்றுவீதிகளைப் பயன்படுத்தவேண்டும். குறித்த வீதியூடாக பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வாகனங்கள் பயணிக்க முடியும் என்று யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)


# மரண அறிவித்தல்

## சந்தனராசா சிறிலதா



எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த சந்தனராசா ஸ்ரீலதா நேற்றுமுன்தினம் (21.02.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் சரஸ்வதிதேவி தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சந்தனராசாவின் அன்பு மனைவியும், தர்மசீலன் (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்), கேமலதா (சுவிஸ்), காலஞ்சென்ற பிரேமலதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, துரைசிங்கம், நவரத்தினம், பாக்கியநாதன், செல்வநாதன், திசைநாதன், பூபதி, ஜெயந்தா, சுதா, கண்ணன், சுரேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரதீப் (கனடா), பிரகாஸ் (லண்டன்), பிரசாந்தி (ஜேர்மனி), பிரசாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மிரியம், பிரவீனா, சுபாஸ்கரன், நிருஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், எலிசன் ஆதித், நிசான், கிசாரா, யஸ்வினி, யதுசா, யஸ்விகா, காருண்ஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ராமியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 111 925

தாயின் மடியில் [illegible].1961

இறைவன் அடியில் 21.02.2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேடு நிலவிய உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம் - வடமராட்சிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி உணவகம் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை அவதானிக்கப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஏழு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டபோது உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதையடுத்தே 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-66)

**வேலையாள் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள **வியாபார நிலையம்** ஒன்றுக்கு O/L சித்தியடைந்த, **கணினி** மற்றும் **ஆங்கில** அறிவுடைய (Data Entry) 25 வயதுக்கு உட்பட்ட திருநெல்வேலியை அண்டிய பகுதியில் வசிக்கும் **ஆண் பணியாளர் தேவை.**

தொடர்பு:- **077 663 6384**

(CS279834) J-1

**பொது அறிவித்தல்**

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

**கீரிமலை நகுலேஸ்வர ஆலயம்**

**மகா சிவராத்திரி உற்சவம் - 2024**

**வாகனத்தரிப்பிடம் மற்றும் தலைக்கவச பாதுகாப்பு நிலையம் குத்தகைக்கு வழுங்கல்**

2024.03.06 முதல் 2024.03.09 வரை குறித்த சேவைக்கான கேள்வி கோரப்படுகிறது. ஆர்வமுடையோர் 2024.03.04ம் திகதி திங்கட்கிழமை பி.ப 02.00 மணிக்கு முன்னதாக உரிய கேள்விப்படிவங்களைப் பூரணப்படுத்திச் சமர்ப்பிக்கலாம்.

மேலதிக நிபந்தனைகள் மற்றும் தகவல்கள் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

**உப அலுவலகம்: 021 224 4180**

**தலைமை அலுவலகம்: 021 224 1130**

க. சுதர்ஜன்
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை. 23.02.2024

(CR 41864) S-1

## யாழ். போதனாவில் தகராறு ஒருவர் கைது

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அலுவலர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த ஒருவரின் சடலத்தை விரைவாகத் தரக்கோரி மருத்துவமனை மேற்பார்வையாளர் அலுவலகத்தில் இந்த நபர் தகராறு செய்தார் என்றும், அலுவலர்களுடன் முரண்பட்டு அங்கிருந்த பெயர்ப்பலகையைச் சேதப்படுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவமனைப் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்ட அந்தநபர், யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ-66)

**முக்கிய அறிவித்தல்**

**அடகு நகை விற்பனை அறிவித்தல்**

**ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி**

**01.10.2022** ஆம் திகதி தொடக்கம் **28.02.2023** ஆம் திகதி வரை அடகு வைத்த நகைகளை **31.03.2024** ஆம் திகதிக் கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும். தவறின் **31.03.2024** ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டு விடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**இல. 31C ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)**
**021 221 7287, 076 636 1238**

## 29ஆம் ஆண்டு நினைவுகளில்



மண்ணில் 18.04.1942 விண்ணில் 14.02.1995

அமரர்

**தியாகராசா அரசரத்தினம்**

(இ.போ.ச.இளைப்பாறிய சாரதி, காரைநகர் டிப்போ)

திதி : மாசிமகம்

இருபத்தொன்பது வருடங்கள் கடந்தும்
ஈரவிழிகளின்னும் காயவில்லை
கோரம் கொண்ட காலன் செய்த
கோலமதால் அப்பா உங்களையிழந்து
காலமெல்லாம் தவிக்கிறோமே!

*நினைவில் வாடும்...*

**குடும்பத்தினர்.**

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

## பாஷண உத்வாசமும், சபிண்டிகரண அழைப்பும்



தோற்றம் 31 . 12 . 1937

மறைவு 14 . 02 . 2024

கடந்த 14.02.2024 புதன்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

**வேலாயுதக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள்**

**(சங்கரத்தை ஐயா)**

அவர்களின் பாஷண உத்வாசம் 24.02.2024 (நாளை) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெறுவதுடன், மதியம் சபிண்டிகரண கிரிகைகளும், தொடர்ந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையும் இடம்பெற உள்ளன. இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**ஓம் சாந்தி சாந்தி**

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்)

முருகன் கோவிலடி, சங்கரத்தை
வட்டுக்கோட்டை
077 809 6445

குடும்பத்தினர்.

CR (41866) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 05 . 1951

மறைவு 22 . 02 . 2024

**கந்தையா சிவலிங்கம்**

(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பளை)

கருகம்பனை, கவுணாவத்தை வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், புளியந்தோட்டம் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் அவர்கள் நேற்று (22.02.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி இளையாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், சிவசுதன் (அவுஸ்திரேலியா), பரீதா (நோர்வே), சுகிர்தன் (ஆசிரியர், யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), வக்சலா (ஆசிரியர், யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகாயினி (அவுஸ்திரேலியா), சற்குணலிங்கம் (நோர்வே), துளசி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமரர் சிவபாக்கியவதி மற்றும் பத்மாவதி, அமரர் சரஸ்வதி மற்றும் சற்குணவதி, தவலிங்கம், அமரர் அருள்லிங்கம் மற்றும் மகாலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர் தில்லையம்பலம் மற்றும் கமலாதேவி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், ஜஸ்விந், தமீரா, தீவிகா, கவீகா, பவீன், வருண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் (புளியந்தோட்டம், மல்லாகம்) நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 238 0190, 077 155 3177

(CR 41865) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் மேற்கு. கலைமகள் முன்பள்ளியின் புதிய மாணவர்களுக்கான கால்கோள் விழா மற்றும் பழைய மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு என்பன சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. (ப-125)



ஆசிரியர் த.ஸ்ரீபிரகாஷ் எழுதிய நெடுந்தீவு நாட்டார் பாடல்களின் தொகுப்பு நூலான "முள்ளில்லாவேலி" எனும் நூல் வெளியீட்டு விழா நெடுந்தீவு மகா வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள ஆலமரத்தடியில் நெடுந்தீவு. வேலணைப் பிரதேச ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சாரதாதேவி கிருஷ்ண தாஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-66)



## தாய்மொழித் தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சர்வதேச தாய்மொழித் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றன. மொழியியல் ஆங்கிலத்துறைத் தலைவர் கவிதா நவகுலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிக்காக்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர் இ. அண்ணாமலை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-27)




## கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.23

தொழில் வாய்ப்புக்கான கற்கையை நிறைவு செய்தவர்களுக்கான தொழிற்சந்தை வழிகாட்டல் கண்காட்சி, வடக்கு மாகாணப் பிரதம செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

பிரதிப் பணிப்பாளர் எஸ்.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாணவர்கள், தொழிற்றுறையை எதிர்பார்ப்பவர்கள், தொழிலில் பயிற்சிகள் பெறுபவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)



முல்லைத்தீவு, விஸ்வநாதன் ஆரம்பப் பாடசாலையின், 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் துரித கணிதத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு விஸ்வநாதன் பாடசாலை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. பாஸ்கரன், யாழ். போதனா மருத்துவர் யோ.கௌரிநேசன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர் . (ப-113)



தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் 30 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் மற்றும் காலணிகளுக்கான வவுச்சர் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (ச-இ)



கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தில் அதிபர் ப. ஆனந்தராசா தலைமையில் இலவசப் பாடநூல் மற்றும் இலவச சீருடை வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ப-159)



## மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் தெரிவுசெய்யப்பட்ட நலிவுற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் வாழ்வாதாரம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இதில் 2 பயனாளிகளின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியுடைய தையல் இயந்திரம், மேசை மற்றும் அலுமாரி என்பனவும் ஒரு பயனாளி குடும்பத்துக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)



நெல்லியடி மத்திய கல்லூரியின் ஊடகக் கழகத் தொடக்க விழா பாடசாலையின் ஊடகக் கழகத் தலைவர் ஜோய் ஜெய்சன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேரேறி வருகிறாள் தேவி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து பரந்து விரிந்து எல்லாம்வல்ல பரம்பொருளாக விளங்கும் சிவப்பரம்பொரு ளின் ஆதிபராசக்தியான உமையவள் எங்கும் நிறைந்த ஸ்ரீ காளிகா பரமேஸ்வரியாக இன்று யாழ். கன்னாதிட்டியிலே தேரேறி வருகின்றாள்.

கன்னாதிட்டிப்பதியே இன்று விழாக்கோலம் பூண்டு கோலாகலமான திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வருகின்ற அற்புதத் திருக்காட்சி காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும். விஸ்வப்பிரம்ம குலத்தவரின் வழிபடு தெய்வமாக மிளிரும் ஸ்ரீ காளி அம்பாள் தம்மை நம்பி வந்து கைதொழும் அடியவர்களைக் கைவிடமாட்டாள். இன்று காலை 9 மணியளவில் அழகான திருத்தேரிலே அலங்கார பூஜிதையாக அம்பிகை ஸ்ரீ காளி அம்பாள் அருட்சக்தியாக அற்புதக் காட்சி தருவாள்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாக அன்னபூரணி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரியின் தேர்வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்திலே இடம்பிடிக்கலாம் என்பது ஐதீகம். அடியார்கள் புடைசூழ அழகிய தேர் ஆடி அசைந்துவரும் அற்புத அருட்காட்சி இன்று வண்ணையிலே காணலாம்.

தாய்க்குத் தாயாக அன்னைக்கு அன்னையாக ஆதிபராசக்தியான அம்பிகை தேர் மீது ஆரோகணித்து வருவது அழகுப் பவனியின் அற்புத நிகழ்வே.

ஆகவே நம்பிவரும் பக்தர்களின் துன்பதுயரங்களை அழித்தொழிக்க வரும் ஸ்ரீ காளிகாதேவியைக் கைதொழுதால் எல்லாம் வெற்றியாகும் என அன்போடு அழைக்கப்படுகின்றனர்.

## 1994-96இல்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சட்டத்தரணி வி.கே. நிறஞ்சன் இந்த விடயங்களை வெளிப்படுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதைகுழியில் இருந்து ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் தொடர்பான பேராசிரியர் ராஜ் சோமதேவவின் பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவருடைய தகவல்களின் அடிப்படையில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள்1994 ஆம் ஆண்டுக்கு முற்படாததும் 1996 ஆம் ஆண்டுக்குப் பிற்படாதது மான காலத்தைக் கொண்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஓர் இடைக்கால அறிக்கையாகப் பார்க்கப்படுகின்றது. இறந்தோரின் வயது, பால், இறப்புக்கான காரணம் என்பன தொடர்பான தகவல்கள் இன்னமும் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்படவில்லை - என்றார். (அ-ம-19)

## விபத்தில்...

புதன்கிழமை அதிகாலை 3.28 மணியளவில் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் மீது மோட்டார்சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் வீட்டு மதிலால் ஏறிக்குதித்து பெற்றோல் ஊற்றி வாகனத்துக்கு தீ வைத்துவிட்டு கிரிக்கெட் மட்டையால் வாகனத்தின் கண்ணாடியை உடைத்துவிட்டு தப்பிச்செல்வது சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை சிறுப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் இந்தக் குற்றச்செயலுக்குப் பயன்படுத்தப்பட்டதையும், அதில் இருவர் சென்றதையும் உறுதிப்படுத்தினார்கள். இதன்போது மேற்படி குற்றச்செயலைப் புரிந்துவிட்டுத் திரும்பும் போதே நாயுடன் ஏற்பட்ட விபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்தமையும், காயமடைந்து சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர் அவருடன் சென்றவர் என்பதையும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிந்துகொண்டனர். இதையடுத்து யாழ். போதனா மருத்துவமனைக்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார், மேற்படி சந்தேகநபரைக் கைதுசெய்தனர். அவருக்கு பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்தனர்.

பல்கலைக்கழக மாணவனின் இறப்பு விசாரணைகளையாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-100-26)

## ஆர்.ஆர்...

பூர்வீகமாகக் கொண்ட ஆர்.ஆர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சிரேஷ்ட துணைத்தலைவர் என்பதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனுக்கு நெருக்கமானவராகவும் அறியப்பட்டவர்.

மாலைதீவு மீதான புளொட் அமைப்பின் தாக்குதலின் போது கைதுசெய்யப்பட்ட ஆர்.ஆருக்கு மாலைதீவு அரசால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலையான அவர், தேர்தல் அரசியலில் பங்கெடுக்காவிட்டாலும் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார். இந்த நிலையில் சிலநாள்களுக்கு முன்னர், கொழும்பில் அவருக்கு இருதய சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. உடல்நலம் தேறி வந்தநிலையில், அவரின் சிறுநீரகங்கள் திடீரென செயலிழந்ததால், நேற்று மாலை உயிரிழந்தார். (அ-ம-159-100-26)

## மூன்றாம்...

6ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டன. இதன்போது 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்டன. அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டன. இதன் போது 40 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இதைவிட சயனைட் குப்பிகள், விடுதலைப் புலிகளுடையவை என்று கருதப்படும் இலக்கத்தகடுகள் என்பனவும் மீட்கப்பட்டன. மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் இந்த வருடம் மார்ச் மாதம் முன்னெடுக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. எனினும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி இன்னமும் நிதியமைச்சால் விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் துறைசார் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். நிதி கிடைக்கும் பட்சத்தில் மார்ச் மாதம் முதலாவது வாரத்தில் அல்லது இடைப்பட்ட பகுதிக்குள் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ம-19)

## மனைவிக்கு...

யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடையொன்றுக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். பொலிஸாருக்கு அது தொடர்பில் தகவல் வழங்கப்பட்டு அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேகநபரான ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார். சான்றுப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. தனது காதலிக்குப் பரிசில் வழங்குவதற்காகவே அவர் இந்தத் திருட்டில் ஈடுபட்டமை பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-ம-26-125)

## கனடாவுக்கு...

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற 21 முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை - கனடாவுக்கு அனுப்புவதாக ஆசைகாட்டி யாழ்ப்பாணத்தில் பெருந்தொகை மோசடிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்றும் இது தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த அறிவுறுத்தியுள்ளார். (அ-ம-26)

## சிறுவர்...

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியர் மாணவனை அழைத்துள்ளார். எனினும் மாணவன் அந்த இடத்துக்குச் செல்லாததையடுத்து கோபமடைந்த ஆசிரியர் உடலில் காயங்கள் ஏற்படும் வகையில் மாணவனைப் பெரிய தடியால் தாக்கியுள்ளார். இதனால் சிறுவனின் கைகளில் இரத்தக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. சிறுவர் இல்ல மாணவன் என்று தெரிந்தும் இப்படி மனிதாபிமானம் இல்லாமல் ஆசிரியர் தாக்கியமை, இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெரும் விசனத்தை உண்டாக்கியுள்ளது. (அ-ம)

## புதிய...

நிலையில், அவர் புதுடில்லிக்கு மாற்றலாகிச் செல்கின்றார். இந்த நிலையிலேயே அந்த இடத்துக்கு சாய் முரளி நியமிக்கப்பட்டுள்ளார்.

33 வயதான சாய் முரளி தற்போது ரஷ்யாவில் உள்ள துணைத்தூதரகம் ஒன்றில் கொன்சியூல் ஜெனரலாகப் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இளைஞரொருவர்...

முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். சடலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. சாவகச்சேரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார். (அ-ம-9)

## விஞ்ஞானபீட...

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் வரவுப் பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாகக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்று மதியம் முதல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

## அழுகிய...

இறப்புத் தொடர்பான தகவல்கள் வெளிவரவில்லை. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்னாலையில் வாள்வெட்டு:

## இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 23

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துன்னாலை, வேம்படிச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் குறித்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். அவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-100)

# கீரிமலை நகுலேஸ்வரம் நாளை கொடியேற்றம்

ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் மார்ச் மாதம் 7ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும் மகாசிவராத்திரி நாளான 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை கண்டகி தீர்த்தக் கடற்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ந.குமாரசுவாமிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (அ-ச-66)


**தேவை**

கனடாவில் வசிக்கும் 1997, 1989, 1992 இல் பிறந்த பெண்பிள்ளைகளுக்கு உள்ளூரில் மணமகன்கள் தேவை.

075 910 6973

**வேலையாள் தேவை**

நல்லூரில் இயங்கும் பல் மருத்துவ நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை. க.பொ.த. சாதாரணதரம் சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வம் உள்ளவர்கள் முற்பகல் 10.00 - 7.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

076 789 8983, 021 221 1444

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், வேம்படி வீதியில் வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 710 9016 (CS/27979)

**காணி விற்பனைக்கு**

நாவற்குழி A9 வீதியில் பனை அபிவிருத்திச் சபைக்கு முன்பாக 400 m தூரத்தில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 608 7502 (CS 53956) (N-1)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- தரகர் தேவையில்லை
- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது

தொடர்பு: 071 173 3911
076 853 5022 (CS 27987) S-1


# வவுனியாவில் 5 வருடங்களில் 67 யானைகள் பலி

வவுனியாவில் கடந்த ஐந்து வருடங்களில் 67 யானைகள் உயிரிழந்துள்ளன என்று வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறிப்பாக செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா உள்ளிட்ட பகுதிகளிலேயே அதிகளவான யானைகளின் இறப்பு பதிவாகியுள்ளது. சட்டவிரோத மான மின்சார வேலிகளில் சிக்கியும், வெங்காய வெடி மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆட்பட்டுமே அதிகளவான யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-110-18)


**பிரபல ஜோதிடர் யாழ் விஜயம்**

தொழில், திருமணத்தடை, மண வாழ்க்கையில் விரக்தி, நோய், காதல் போன்ற சகல விதமான பிரச்சினைகளுக்கும் ஜோதிடர் குமாரசுவாமியைச் சந்திக்கலாம். முன் அனுமதி பெற்று வரவும்.

திரேசா இன்
No. 72 றக்கா வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:- 077 877 8470 (CS/54086) J-1

**காணி விற்பனைக்கு**

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அருகாமையில் தபால் கந்தோர் வீதியில் 200m தூரத்தில் இருபக்க பாதை வசதிகளுடன் 12 பரப்பு 16 குளி காணி விற்பனைக்கு உண்டு - தெளிவான ஆவணங்களுடன். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்.

தொடர்பு:- 077 136 2490 (CS/54059) J-1

**காணி விற்பனைக்கு**

இராசபாதை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 986 5457 (CS / 27915)

**காணி விற்பனைக்கு**

புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

2 பரப்பு - 5 லட்சம். கையிருப்பில் 25 காணித்துண்டுகள் மாத்திரம் உள்ளன.

தரகர் தேவையில்லை


பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504 (CS 27943A-1)

நீங்காத நினைவுகளுடன்

**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 17.04.1947



மறைவு 08.03.2020

அமரர்

**Lion வைரமுத்து சுப்பிரமணியம்**

(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் - K.K.S, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் - வலி கிழக்கு)

திதி 23.02.2024

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன்
உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி
தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர் சிறப்பிற்கும் வழிகாட்டி
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க
இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர். (CS27975) J-1


செய்தி: 021 493 0000 - விளம்பரம்: 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org